Golden Point Award 2019
Tamil Poetry – Second Prize
செய்திகளின் சாரம் *(News Brief)* and other poems
by சம்கி (ஆயிலிஷா மந்திரா) Chumki (Ayilisha Manthira)

**செய்திகளின் சாரம்**

நேரம் சரியாக 2.32
சிங்கப்பூருக்கு சரியாகவும்
இந்தியாவுக்கு சரியில்லாமலும்
அமெரிக்காவில் வேகமாகவும்
லாவோஸ்ஸில் மெதுவாகவும்.

ஆசிய கண்டம்
ஒரு கண்டத்திலிருந்து மீள
ஆப்ரிக்க கண்டம்
அதே கண்டத்திலேயே விழுந்தது.

கண்டதையெல்லாம் -
மன்னிக்கவும் -
கண்டுக்கொண்டதை எல்லாம் அச்சிட
இமைக்காமல் அவதானித்திருந்தன
ஒரு செய்தி நிலையத்தின் கண்கள்.

நொடிக்கு நொடி
நெருக்கடி ஆவிகள்
அந்த அடுக்குமாடி கட்டிடத்தில்
அடக்கம் பெறாமல் சுற்றித் திரிந்தன

Golden Point Award 2019
Tamil Poetry – Second Prize
செய்திகளின் சாரம் *(News Brief)* and other poems
by சம்கி (ஆயிலிஷா மந்திரா) Chumki (Ayilisha Manthira)

அமைதியாய்

ஒரு செவிட்டுக் காகம்

இன்பமாய்

அக்கட்டிடக்கூரையின் மேல் மலம் கழித்தது.